# நித்தியம் முதல் நித்தியம் வரை

“உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது.” [அப்போஸ்தலர் 15:18]




ஏசாயா 40; 43:10-13; 44:6,8; 45:5-8,18, 45:21-22; 46:5,9; 48:12.

“ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது” [யோவான் 1:1]

CREATED & PRODUCED BY RICHARD L. S. GAN • PROPHETIC*REVELATION GHIM MOH P. O. BOX 333 REPUBLIC OF SINGAPORE 912742 • © 1993, 2012

“ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.” [ஆதியாகமம் 1:1]




### தேவ தூதர்களின் தொடக்கம்

- நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி.......... அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே. [யோபு 38: 4-7]
- விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம் [எபிரெயர் 11:3].

“நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத்தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்..” [ஏசாயா 44:6]




## வரலாற்றுக்கு முந்தைய காலம்




“நாள் உண்டகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்” [ஏசாயா 43:13]

.... தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்... [உபாகமம் 6:4]

காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.... [எபேசியர் 1: 9-11]

ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் [எபேசியர் 5:6]

ஆதியில் பூமி சூரியனை முழுமையாக சுற்றி வர எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் 360. பூமியின் மையம் சூரியனுக்கு செங்குத்தாக இருந்தது



- நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, புனித வேதாகமத்தின் அச்சாரமாயிருக்கிறார். அவரே நம் வாழ்வின் காரணகர்த்தா. சர்வமும் அவர்தம் மகிமையைப் பறைசாற்றுகின்றன. அவரில்லாமல் ஒன்றும் படைக்கப்பட்டிருக்க மாட்டாது . காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட்டது.
- ஆதியில் இருந்த வார்த்தை, இயேசு (ஏஷுவா) அல்ல. அது தேவனின் கிறிஸ்து. வார்த்தை தேவனாக இருந்தது. படைப்பின் தொடக்கத்ததில் வார்த்தை வெளிப்படும் முன்பே, யாவே தனக்குள்ளே சித்தத்தை ஆலோசித்தார். (தங்களுக்குள் அல்ல - எபேசியர். 1:9,11) . தேவனின் வார்த்தை இயேசு கிறிஸ்துவில் சகல பரிபூரணமாக வெளிப்பட்டு முழுமையடைந்தது. (கொலோசியர். 1:19,2:9). இயேசு, தேவத்துவத்தின் இரண்டாம் அல்லது மூன்றாம் அங்கம் அல்ல. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறது.

- தேவனின் சாயலாகவும், தேவனின் ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்ட இரண்டு படைப்புகளில் முதலில் படைக்கப்பட்டவர்கள் - தேவ தூதர்கள். இரண்டாவதாக படைக்கப்பட்டவன் - மனிதன் (ஆதாம்).
- இரண்டு படைப்புகளும் தேவ சாயலின் ஆவிக்குரிய பண்புக்கூறுகளோடு முதலில் உண்டாக்கப்பட்டு பிறகு தேவ ரூபத்தின்படி உருவாக்கபட்டார்கள்.

- பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார். [சங்கீதம் 104: 5-6]
- மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் [யோபு 38: 9]
- பசுமைக் குடில் விளைவின் காரணமாக, பூமியின் வானிலை சமநிலையில் இருந்தது. ஆதலால்,வெப்பகாலம் பனிக்காலம் என்ற காலப் பிரிவுகள் இல்லை

**வரலாற்றுக்கு முந்தைய பூமி - தேவதூதர்களுக்கான சோதனைக்களம்**

வரலாற்றுக்கு முந்தைய மனிதன்:

அவர்கள் உருவில் மனிதர்களைப் போல இருந்தாலும், ஆதாம் போல தேவ சாயலில் படைக்கப்படாததால், அவர்கள் தேவனை ஆராதிக்கவில்லை. விலங்குகள் ராஜ்யத்தில் முதன்மையான படைப்பாக இருந்தார்கள் மற்றும் அவர்களால் பேச முடிந்தது.